(எட்டாவது பாராளுமன்றம் - மூன்றாவது கூட்டத்தொடர் )

**இல. 59.]**

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2019 மே 09 வியாழக்கிழமை, மு.ப. 10.30 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

20/ ’18

கௌரவ ஹேஷா விதானகே,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2005 ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரையான காலத்தினுள் இலங்கை இராணுவத்திற்கு, உணவின் பொருட்டு இறைச்சி வகைகளை வழங்கிய வழங்குநர்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(ii) இராணுவத்திற்கு இறைச்சி வகைகளை வழங்கும் வழங்குநர்கள் தெரிவு செய்யப்படும் விதம் யாது என்பதையும்;

(iii) இக்காலப்பகுதியில் ஒவ்வோர் இறைச்சி வகைக்குமென ஆண்டுதோறும் செலுத்தப்பட்ட பணத்தொகை தனித்தனியாக யாது என்பதையும்;

(iv) அதற்கென மேலும் செலுத்த வேண்டியுள்ள பணத்தொகை யாது என்பதையும்;

(v) மேற்படி இறைச்சி வகை ஒவ்வொன்றினதும் வருடாந்த தேவைப்பாடு தனித்தனியாக யாது என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2.

66/ ’18

கௌரவ தயாசிறி ஜயசேகர,— வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) அனுராதபுர மாவட்டத்துக்கு சொந்தமான இப்பலோகம பிரதேச செயலகப் பிரிவுக்குரிய பூகொல்லாகம, பலும்கல பிரதேசத்தின் வரலாற்றுச் சிறப்புமிக்க தொல்லியல் காணியொன்று பொறித்தொகுதிகளை கொண்டு அழிக்கப்படுகிறதா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iii) இக்காணியில் புராதன அழிவுச் சின்னங்கள் காணப்படுகின்றனவா என்பதையும்;

(iv) மேற்படி அழிவுச் சின்னங்கள் எந்த காலத்துக்குரியதென ஊகிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) மேற்படி காணியின் உரிமையாளர்கள் யாவர் என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி நடவடிக்கைக்கு அனுமதி அளித்த உத்தியோகத்தர் யார் என்பதையும்;

(ii) மேற்படி நடவடிக்கைக்கு தொல்லியல் திணைக்களத்தின் அனுமதி வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) பொறித் தொகுதிகளை பயன்படுத்தி இத் தொல்லியல் காணியை அழிப்பதற்கு பங்களிப்பு செய்தவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3.

141/ '18

கௌரவ சமிந்த விஜேசிறி,— போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பதுளை மாவட்டத்திலுள்ள புகையிரத நிலையங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி புகையிரத நிலையங்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

(iii) 2010 ஆம் ஆண்டு முதல் இற்றைவரை ஒவ்வொரு புகையிரத நிலையத்திலிருந்தும் ஈட்டிக்கொள்ளப்பட்ட வருமானம் ஒவ்வொரு வருடத்திற்கேற்ப வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(iv) தற்போது மேற்படி புகையிரத நிலையங்களில் பணியாற்று\பவர்களின் பெயர், முகவரி மற்றும் பதவிப் பெயர்கள் யாவையென்பதையும்;

(v) நல்லாட்சி அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததையடுத்து இற்றைவரை பதுளை மாவட்டத்தின் புகையிரத நிலையங்களில் வழங்கப்பட்டுள்ள தொழில்கள் மற்றும் அத்தொழில்கள் வழங்கப்பட்ட முறையியல் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4.

340 / '18

கௌரவ இஷாக் ரஹுமான்,— நகரத் திட்டமிடல், நீர்வழங்கல் மற்றும் உயர்கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வட மத்திய மாகாணத்தின் சனநெருக்கடிமிக்க நகரமொன்றான கல்னேவயைச் சூழ வாழ்கின்ற மக்களுக்கு குடிநீர் பிரச்சினை இருப்பதை அறிவாரா என்பதையும்;

(ii) சிறுசீரக நோய் பரவலாக இருக்கின்ற மேற்படி விவசாயப் பிரதேசத்தின் மக்களுக்கு குடிநீர் வழங்க ஏதெனும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், அந்த நடவடிக்கை யாதென்பதையும்;

(iv) மேற்படி நடவடிக்கை அமுல்படுத்தப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5.

426/ '19

கௌரவ சி. சிறீதரன்,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) யாழ்ப்பாணம் மாவட்டத்தின் பேதுருதுடுவ பிரிவின் எழுவைதீவு பகுதியின் நான்காம் வலயத்தில் வசித்தவரும் ஆறு பெண் பிள்ளைகளின் தகப்பனுமாகிய அன்ரணி ஜேசுதாசன் 2014.12.19 அன்று எழுவை தீவினை சூழ்ந்துள்ள நீர்ப்பரப்பினுள் மீன்பிடித்துக் கொண்டிருந்த போது கடற்படையின் டோரா படகின் தாக்குதலின் விளைவாக கொல்லப்பட்டார் என்பதனையும்;

(ii) திரு. ஜேசுதாசனின் மரணத்திற்கான நஷ்டஈட்டினை அநாதரவாகியுள்ள அவரது பிள்ளைகளுக்கு வழங்குவதற்கு உடனடியான ஆயத்தங்களை செய்வதாக கடற்படை வாக்குறுதியளித்ததென்பதனையும்;

(iii) அவரது மரணம் நடந்து நான்கு ஆண்டுகள் கடந்துவிட்ட போதிலும் வாக்குறுதிகளில் எதுவும் நிறைவேற்றப்படவில்லை என்பதனையும்;

(iv) திரு. ஜேசுதாசனின் மரணத்திற்கான நீதி கோரி நான்கு வருடங்களுக்கு முன்னர் நீதிமன்றத்தில் வழக்கொன்று பதிவுசெய்யப்பட்டதென்பதனையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) ஆமெனில், மேற்குறிப்பிட்ட வழக்கைத் தொடர்ந்தவர் யாரென்பதையும், நீதிமன்றம் எதுவென்பதனையும்;

(ii) வழக்கு இலக்கம் என்னவென்பதனையும்;

(iii) நான்கு வருடங்களுக்கு முன்பு இந்த வழக்கு தொடரப்பட்ட போதிலும் தற்போது வரைக்கும் நஷ்டஈடு ஏன் வழங்கப்படவில்லை என்பதற்கான காரணம் என்னவென்பதனையும்;

(iv) பெற்றோரை இழந்த அப்பிள்ளைகளின் தந்தையாரின் மரணத்திற்கு உரிய முறையிலான நஷ்டஈடு எப்போது வழங்கப்படுமென்பதனையும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

6.

432/ '19

கௌரவ கனக ஹேரத்,— போக்குவரத்து மற்றும் சிவில் விமானசேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போது இலங்கையில் புகையிரத விபத்துக்கள் அதிகரித்துள்ளதென்பதை அறிவாரா;

(ii) ஆமெனில், இதற்கான காரணம் யாது;

(iii) தற்போது பயன்படுத்தப்படும் புகையிரத சைகை முறைமை பயன்படுத்தப்பட்டுள்ள காலம் யாது;

(iv) தற்போதைய புகையிரத போக்குவரத்து தேவைகளுக்கு இந்த சைகை முறைமை போதுமானதா;

(v) இன்றேல், இதற்காக நவீன தொழிநுட்பத்துடனான புகையிரத சைகை முறைமையொன்றை தாபிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

7.

500/ '19

கௌரவ ஜயந்த சமரவீர,— போக்குவரத்து, சிவில் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாகாணங்களுக்கிடையேயான பேருந்து, மாகாணங்களுக்குள் இயக்கப்படும் பேருந்து பயண அட்டவணைகளை காட்சிப்படுத்துவதற்கு பொருத்தப்பட்டுள்ள இலத்திரனியல் பலகைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) இவை பொருத்தப்பட்டுள்ள இடங்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) இதற்காக செலவிடப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்;

(iv) தற்சமயம் இயங்காத நிலையிலுள்ள பலகைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(v) ஆமெனின், இவற்றை மீண்டும் இயங்கச் செய்வதற்கு எடுக்கப்பட்டுள்ள வழிமுறைகள் யாவை என்பதையும்;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

8.

511/ '19

கௌரவ விமலவீர திசாநாயக்க,— உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பாராளுமன்ற உறுப்பினர்களின் கொடுப்பனவுகளோ அல்லது வசதிகளோ அதிகரிக்கின்ற போது அதற்கு ஏற்றவாறு மாகாண சபை உறுப்பினர்களுக்கும் அவற்றில் பாதி ஏற்புடையதென்பதையும்;

(ii) கடந்த காலத்திற்குள் பாராளுமன்ற உறுப்பினர்களின் கொடுப்பனவுகள் அதிகரிக்கப்பட்டுள்ளதென்பதையும்;

(iii) எனினும் காலம் நிறைவுபெற்றுள்ளமையினால் தற்போது கலைக்கப்பட்டுள்ள கிழக்கு மாகாணசபையின் உறுப்பினர்களுக்கு மேற்படி அதிகரிக்கப்பட்ட கொடுப்பனவுகளின் அல்லது வசதிகளின் ஒரு பகுதி நிலுவை கொடுப்பனவாக வழங்கப்படவுள்ளதென்பதையும்;

(iv) கிழக்கு மாகாண சபை கலைக்கப்பட்டு தற்போது ஒரு வருடம் நெருங்கியுள்ள போதிலும், அம்மாகாண உறுப்பினர்களுக்குரிய நிலுவை கொடுப்பனவு இது வரை வழங்கப்படவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) இலங்கையின் ஏனைய மாகாண சபைகளின் உறுப்பினர்களுக்கு உரித்தான மேற்படி கொடுப்பனவு கிழக்கு மாகாண சபை உறுப்பினர்களுக்கு கிடைக்காமை அநீதியென ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) கிழக்கு மாகாண சபையின் முன்னால் உறுப்பினர்களுக்குரிய நிலுவை கொடுப்பனவு வழங்கப்படும் திகதி யாதென்பதையம்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

9.

520/ '19

கௌரவ இந்திக்க அநுருந்த ஹேரத்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நாட்டில் காணப்படும் மொத்த அரசாங்க பாடசாலைகளின் எண்ணிக்கை யாது;

(ii) நாட்டில் காணப்படும் சர்வதேச பாடசாலைகளின் எண்ணிக்கை யாது;

(iii) 2015 முதல் 2017 ஆம் ஆண்டு வரையில் தேசிய பாடசாலைகளுக்கு ஆட்சேர்க்கப்பட்டுள்ள ஆசிரியர்களின் எண்ணிக்கை யாது;

(iv) 2015 முதல் 2017 ஆம் ஆண்டு வரையில் மாகாண பாடசாலைகளுக்கு ஆட்சேர்க்கப்பட்டுள்ள ஆசிரியர்களின் எண்ணிக்கை யாது;

(v) 2016 ஆம் ஆண்டு முதல் அரையாண்டில் வெளிவாரி மற்றும் உள்ளக மதிப்பீட்டு முறைமைகள் மூலம் மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்பட்டுள்ள ஆசிரியர்களின் எண்ணிக்கை யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2016 வரவு - செலவில் கிராமிய மற்றும் பிரதேச பாடசாலைகளில் ஆசிரியர்களுக்கான உத்தியோகபூர்வ இல்லம் / ஓய்வு விடுதிகளை நிர்மாணிப்பதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதித்தொகை யாது;

(ii) மேற்படி கருத்திட்டத்தின் தற்போதைய முன்னேற்றம் யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

10.

534/ ' 19

கௌரவ பிமல் ரத்நாயக்க,— அமைச்சரவை அந்தஸ்த்தற்ற விஞ்ஞான தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) வத்தளை, கொங்கிங்தொட்ட, இலக்கம் 656/102/5 ஏ எனும் முகவரியில் வசிக்கும் திரு. சுசந்த அமரசிங்ஹ நீண்ட காலமாக மேற்கொண்ட ஆராய்ச்சிகளின்படி அகற்றப்படுகின்ற கழிவுப்பொருட்களிலிருந்து சீமெந்துக் கற்களை உற்பத்தி செய்தல், வீதிகளுக்கு காபற் இடுதல் உட்பட 12 புதிய கண்டுபிடிப்புக்களை மேற்கொண்டுள்ளார் என்பதையும்;

(ii) இது பற்றி அச்சு ஊடகங்களின் மூலம் பல தடவைகள் விளம்பரப்படுத்தப்பட்டுள்ளது என்பதையும்;

(iii) இக்கைத்தொழிலை விருத்தி செய்து, நாட்டுக்கு சேவை செய்ய திரு. அமரசிங்ஹவுக்கு உதவுமாறு உங்கள் அமைச்சினாலும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது என்பதையும்;

(iv) எனினும், இதுவரை எந்தவோர் உதவியும் வழங்கப்படவில்லை என்பதையும்;

(v) இன்றளவில், பலதரப்பட்ட தரகர்களின் மூலம் இவரது தொழில்நுட்ப அறிவை பணம் செலுத்திப் பெற்றுக்கொள்ள வெளிநாட்டு முகவர்கள் முயன்று வருகின்றனர் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) திரு. அமரசிங்ஹவின் இக்கண்டுபிடிப்புக்களைப் பயன்படுத்தி இவரின் உற்பத்திகளை நாட்டுக்கு அறிமுகஞ்செய்ய நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) ஆமெனின், அந்நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) அந்நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் திகதி யாது என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

11.

586/ '19

கௌரவ (கலாநிதி) பந்துல குணவர்தன,— நெடுஞ்சாலைகள், வீதி அபிவிருத்தி மற்றும் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2016 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத்திட்ட பிரேரணை இலக்கம் 209 இன் பிரகாரம், அம்பாந்தோட்டை துறைமுகம் ஊடாக செல்கின்ற கடல் மார்க்கத்தை வருடாந்தம் 4,500 எண்ணெய்க் கப்பல்கள் உட்பட 35,0000 கப்பல்கள் பயன்படுத்துவதாக குறிப்பிட்டு, ஆழ்கடலில் எண்ணெய் வழங்கும் பணியில் பிரவேசிப்பதற்கு தனியார் துறையினர் ஊக்குவிக்கப்படுமென முன்மொழியப்பட்டதென்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) மேற்படி முன்மொழிவை நடைமுறையில் யதார்த்தமாக்க இதுவரை மேற்கொண்டுள்ள நடவடிக்கை யாதென்பதையும்;

(iii) மேற்படி முன்மொழிவின் பிரகாரம், மேற்படி பணிக்கான உரிமப்பத்திரம் வழங்க வெளிப்படைத் தன்மையுடன்கூடிய விலை கேட்பு முறையியலொன்று பின்பற்றப்பட்டதா என்பதையும்;

(iv) அதன் பிரகாரம், ஆழ்கடலில் எண்ணெய் வழங்க உரிமப்பத்திரம் பெற்றுக்கொண்ட தரப்பினர்கள் யாரென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

12.

626 /'18

கௌரவ ஷெஹான் சேமசிங்க,— கமத்தொழில், கிராமியப் பொருளாதார அலுவல்கள், கால்நடை வளங்கள் அபிவிருத்தி, நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரகவள மூலங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2016.06.21 ஆம் திகதி எப்பாவல பொஸ்பேட் நிலையம் தீப்பற்றியதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அதனால் எற்பட்ட நட்டம் யாது என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) இச்சம்பவம் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளப்பட்டிருப்பின், அதன் முன்னேற்றம் யாது என்பதையும்;

(ii) இச்சம்பவம் தொடர்பாக அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வாளரினால் விசாரணை மேற்கொள்ளப்பட்டதா என்பதையும்;

(iii) அவ்வாறாயின், அந்த விசாரணை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் யாவை என்பதையும்;

(iv) அந்த விசாரணைக்கமைய பொறுப்புக்கூற வேண்டிய நபர்கள் இனங்காணப்பட்டுள்ளனரா என்பதையும்;

(v) அவ்வாறாயின், இது தொடர்பில் எடுக்கப்படவுள்ள அடுத்தக் கட்ட நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

13.

689/ '19

கௌரவ உதய பிரபாத் கம்மன்பில,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2010 ஆம் ஆண்டு தொடக்கம் 2015 ஆம் ஆண்டு வரையிலான காலத்தில், வரையறுக்கப்பட்ட லங்கா வைத்தியசாலையின் பங்கு உரிமையாளர் ஒருவராக திரு. கோட்டாபய ராஜபக்ஷ செயற்பட்டுள்ளாரா என்பதையும்;

(ii) ஆமெனின், இக்காலப்பகுதியில் வரையறுக்கப்பட்ட லங்கா வைத்தியசாலையின் தலைவராக இவர் பெற்றுக்கொண்ட சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் எவ்வளவென்பதையும்;

(iii) 2010 ஆம் ஆண்டு தொடக்கம் 2015 ஆம் ஆண்டு வரையிலான காலத்தில், வரையறுக்கப்பட்ட லங்கா வைத்தியசாலை ஈட்டிய வருடாந்த இலாபம் ஒவ்வொரு ஆண்டு அடிப்படையில் தனித்தனியே எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

14.

764/ '19

கௌரவ சுசந்த புஞ்சிநிலமே,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சிவில் பாதுகாப்பு திணைக்களத்தின் நிர்மாணப் பணிகளுக்காக சேருவில பிரதேச செயலகப் பிரிவுக்குச் சொந்தமான மகாவலி கங்கையின் மடன்னட்டி கடவையில் 100 கியூப் மணலை அகழ்வதற்கான உரிமப்பத்திரம் நேரடியாக அத்திணைக்களத்துக்கு வழங்கப்பட்டிருக்கையில், உரிமப்பத்திரம் வழங்கப்படக் கூடாத சாபிநகர் இறங்குதுறையிலிருந்து மணலைப் பெற்றுக்கொள்வதற்காக பிற நபரொருவரது பெயரில் C483984 ஆம் இலக்க உரிமப்பத்திரத்தை வழங்குவதற்கான காரணம் யாது;

(ii) சாபிநகர் இறங்குதுறையிலிருந்து பெற்றுக்கொள்ளப்படும் மணலில் வண்டல் மண் கலந்துள்ளதால் இதனை துப்பரவு செய்ய வேண்டுமென்பதுடன், இந்த இறங்குதுறையிலிருந்து அகழப்பட்ட மணலில் எந்தளவினை தற்போது சிவில் பாதுகாப்பு திணைக்களம் பெற்றுக்கொண்டுள்ளது;

(iii) சிவில் பாதுகாப்பு திணைக்களத்துக்கு மணல் வழங்குவதற்காக பிற நபரொருவரை இணைத்துக் கொள்வதற்கான அங்கீகாரம் இத்திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா

(ஆ) இன்றேல், ஏன்?

15.

862/ '19

கௌரவ வாசுதேவ நாணாயக்கார,— நிதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2018.06.23 ஆம் திகதியன்று நடைபெற்ற அரச உத்தியோகத்தர்களின் நலன்புரிச் சங்கத்தின் உத்தியோகத்தர் தெரிவுக்கான தேர்தல் ஊழல் மற்றும் மோசடியற்றதாக நடாத்துவதற்கு நலன்புரிச் சங்கத்தின் அங்கத்தவர்களினால் அரச உத்தியோகத்தர்களிடம் விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கிணங்க நிதி அமைச்சின் செயலாளர் நடவடிக்கை எடுத்துள்ளாரா என்பதையும்;

(ii) இது தொடர்பாக ஆற்றுப்படுத்தப்பட்ட மனுவில் குறிப்பிட்டுள்ளவாறு மேற்படி உத்தியோகத்தர் தெரிவுக்கான தேர்தலுக்கு ஏற்புடைய ஊழல் மற்றும் மோசடிக் குற்றச்சாட்டு தொடர்பாக பக்கச்சார்பற்ற விசாரணையொன்றை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

நிதி அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்ட அறவீடு சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 1),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீடு சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2019 சனவரி 03 ஆம் திகதிய 2104/30 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.03.29 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 2.

நிதி அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்ட அறவீடு சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 2),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீடு சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2019 பெப்ரவரி 01 ஆம் திகதிய 2108/65 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.03.29 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 3.

நிதி அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்ட அறவீடு சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 3),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீடு சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2019 பெப்ரவரி 07 ஆம் திகதிய 2109/15 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.03.29 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 4.

நிதி அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்ட அறவீடு சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 4),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீடு சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2019 பெப்ரவரி 08 ஆம் திகதிய 2109/20 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.03.29 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 5.

நிதி அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்ட அறவீடு சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 5),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீடு சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2019 பெப்ரவரி 24 ஆம் திகதிய 2111/58 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.03.29 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 6.

நிதி அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்ட அறவீடு சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 6),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீடு சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2019 மார்ச் 02 ஆம் திகதிய 2112/48 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.03.29 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 7.

நிதி அமைச்சர்,— வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதி,— 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 7 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 29 ஆம் பிரிவின் கீழ் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2019 பெப்ரவரி 28 ஆம் திகதிய 2112/25 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.03.29 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதி அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 8.

நிதி அமைச்சர்,— சுங்கக் கட்டளைச் சட்டத்தின் கீழ் தீர்மானம்,— (அத்தியாயம் 235) சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் கீழ் இறக்குமதித் தீர்வைக் கட்டணங்கள் தொடர்பில் 2019.03.29 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட தீர்மானம் அங்கீகரிக்கப்படுமாக.

(2019 மார்ச் 05 ஆம் திகதிய 2113/2 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை )

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 9.

அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்,— செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் கீழ் கட்டளை,— 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் 3 (4) ஆம் பிரிவின் கீழ் அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2018 ஓகஸ்ட் 14 ஆம் திகதிய 2084/18 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.03.29 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 10.

நிதி அமைச்சர்,— வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதி,— 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 7 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 29 ஆம் பிரிவின் கீழ், சர்வதேச அரச பத்திரங்கள் வழங்குதல் தொடர்பில் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2019 பெப்ரவரி 27 ஆம் திகதிய 2112/17 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.04.04 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதி அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 11.

தொலைத்தொடர்புகள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர்,— விளையாட்டில் ஊக்குப் பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான சமவாயச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2013 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, விளையாட்டில் ஊக்குப் பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான சமவாயச் சட்டத்தின் 3 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 34 ஆம் பிரிவின் கீழ், தடைசெய்யப்பட்ட பொருட்களின் பட்டியல் - 2019 தொடர்பில், தொலைத்தொடர்புகள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2019 பெப்புருவரி 11 ஆம் திகதிய 2110/2 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.04.03 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 12.

கொழும்பு பங்குத் தொகுதிப் பரிவர்த்தனையை பரஸ்பரமற்றமயமாக்கல் சட்டமூலம் — குழு ஆய்நிலை.

* 13.

இலங்கை வர்த்தக மத்தியஸ்த நிலைய (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 14.

பிணையங்கள் பரிவர்த்தனை சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 15.

காலவிதிப்பு (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 16.

இலங்கை மின்சாரம் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 17.

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 18.

தேயிலை ஆராய்ச்சி சபை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 19.

அரச தொழில் முயற்சிகள், மலைநாட்டு மரபுரிமைகள் மற்றும் கண்டி அபிவிருத்தி அமைச்சர்,— அரசியலமைப்பின் கீழ் தீர்மானம்,— பாராளுமன்றத்தில் ஆகக்கூடுதலான ஆசனங்களைப் பெற்றுள்ள ஐக்கிய தேசியக் கட்சியினால் தேசிய அரசாங்கமொன்று நிறுவப்பட்டுள்ளதால், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 46 (4) உறுப்புரையின் பிரகாரம் அமைச்சரவை அமைச்சர்களினது எண்ணிக்கை 48 ஐ விட விஞ்சாதவாறு இருத்தல் வேண்டுமெனவும், அமைச்சரவை உறுப்பினர்கள் அல்லாத அமைச்சர்களினதும் பிரதி அமைச்சர்களினதும் எண்ணிக்கை 45 ஐ விட விஞ்சாதவாறு இருத்தல் வேண்டுமெனவும் இப்பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்படுகின்றது.

* 20.

நிதி அமைச்சர்,— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல் (இல.1),— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் (52 ஆம் அத்தியாயமான) 25 ஆம் பிரிவின் கீழ், மதுவரி தொடர்பாக நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2018 சனவரி 18 ஆம் திகதிய 2054/42 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2018.05.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான அறிவித்தல் அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 04/2018)

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 21.

நிதி அமைச்சர்,— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல் (இல.2),— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் (52 ஆம் அத்தியாயமான) 32 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 25 ஆம் பிரிவின் கீழ் வருடாந்த மதுபான உரிமக் கட்டணம் தொடர்பில் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2017 திசெம்பர் 11 ஆம் திகதிய 2049/4 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2018.03.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான அறிவித்தல் அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 1004)

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 22.

பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழ் தீர்மானம்,— இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 104ஆ (5) (அ) உறுப்புரையின் பிரகாரம் தேர்தல்கள் ஆணைக்குழுவினால் ஆக்கப்பட்டு 2017 திசெம்பர் 04 ஆம் திகதிய 2048/1 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2018.01.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான மக்கள் தீர்ப்பொன்றுக்கான அல்லது தேர்தலொன்றுக்கான காலக்கெடுவின் போது இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்கள் பின்பற்றியொழுக வேண்டிய ஒழுக்கநெறிகள் அல்லது வழிகாட்டு நெறிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 23.

அரசியலமைப்பின் கீழ் பிரேரணை,— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2016 யூன் 22),— “இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 104ஆ (5) (அ) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளின் பிரகாரம், தேர்தல் ஆணைக்குழுவினால் 2016 பெப்புருவரி 25 ஆம் திகதிய 1955/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும், 2016.05.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான, மக்கள் தீர்ப்பொன்றுக்கான அல்லது தேர்தலொன்றுக்கான காலக்கெடுவின் போது இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்கள் பின்பற்றியொழுக வேண்டிய ஒழுக்கநெறிகள் அல்லது வழிகாட்டு நெறிகள் அங்கீகரிக்கப்படுமாக” எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

* 24.

பௌத்த அறநிலையங்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 25.

தேரவாத பிக்குமார்கள் கதிகாவத் (பதிவு செய்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.).

26.

சிறுவர் புனர்வாழ்வு மையம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

27.

இலங்கை ஐக்கிய கிறிஸ்தவ நட்புரிமை (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

28.

ஸ்ரீ லங்கா மகளிர் சம்மேளனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

29.

மொணறாகல மாவட்ட கான்த்தா மஹா சங்கமய (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

30.

லசாலியன் சமூக கல்விச் சேவைகள் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

31.

சர்வதேச பெண்கள் மற்றும் பிள்ளைகளின் உரிமைகள் பேரவை (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

32.

ஆலோகா சமூக சேவை மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

33.

த இன்ஸ்டிட்யுட் ஒவ் சேர்டிபைட் பப்ளிக் அக்கவுன்டன்ஸ் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

34.

ஸ்ரீ சாக்கியசிங்காராம விகாரஸ்த கார்யசாதக சங்விதான (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

35.

இலங்கை கட்டிட சேவைகள் பொறியியல் மற்றும் தொழில்நுட்பவியல் நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

36.

டாக்டர். எஸ்.எஸ். குணவர்தன சுதேச ஆயுர்வேத அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

37.

மோகன் லங்கா மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

38.

சாயா மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றன.